1979 ஏப்ரல் 9]

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண். 46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்,

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாகக் கருதப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண். 46— இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 15,59,79,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண்.48 — ஜமீன்தார்களுக்கு இழப்பீடு.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், பொ. விஜயராகவன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண். 48-ஜமீன்தார்களுக்கு இழப்பீடு என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவையின் 82-ஏ விதியின்கீழ் உள்ளாட்சித்துறை அமைச்சரவர்கள் ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

6. அறிக்கை அளித்தல்.—(தொடர்ச்சி)

(இ) விதி 82ஏ-இன் கீழ் திருத்தம்.

[பிற்பகல் 12-40].

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 82-ஏ-ன் கீழ் ஒரு அறிக்கை அளிக்கிறேன்.

23—3—1979 அன்று கோரிக்கை எண். 28—சமுதாய வளர்ச்சி கோரிக்கையைச் சார்ந்த நிதி இணைப்பு வெளியீடு 1979-80 அவையின்முன் வைக்கப்பட்டது. அந்த வெளியீட்டின் தமிழ் நகல்களில் பக்கம் 71 லும், ஆங்கில நகல்களில் பக்கம் 68 லும் இணைப்பு 1-ல் மற்ற விபரங்களுடன் கீழ்க்கண்டவாறு விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன:—

(இ)	வருவாய்த்துறை கோட்டங்கள் ..	50
(ஈ)	வட்டங்கள், சார்பு வட்டங்கள் உட்பட ..	120

இவற்றின் சரியான விவரம் கீழ்க்காணுமாறு :—

(இ)	வருவாய்த்துறை கோட்டங்கள் ..	49
(ஈ)	வட்டங்கள், சார்பு வட்டங்கள் உட்பட ..	166

(8) வரவு செலவுத் திட்டம் 1979-80—வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

(ஊ) கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

(எ) கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : சட்ட மன்றப் பேரவைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 14,49,98,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சர்களின் சம்பளம், சுற்றுப்பயணச் செலவு, கேளிக்கை. விருந்தோம்பல் ஆகிய செலவுகள் குறித்து விவாதிக்க—

''மானியக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 14,49,98,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.